பாடம் 6

கடிகாரத்தில் நீண்டநேரம்

‘தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர்’ என்பதை எசேக்கியா ராஜா அறிந்துகொண்டதை இன்றைய பாடத்தில் பார்ப்போம்.

எசேக்கியா ராஜா மிகவும் சுகமில்லாமல் இருந்தார். அவரது உடல்நிலை மிகவும் மோசமாகிக்கொண்டே வந்தது. மிகவும் பெலவீனமாக இருந்தார். எந்த மருந்தாலும் எந்த மருத்துவராலும் அவரது வியாதியைக் குணப்படுத்த முடியவில்லை. பொதுவாக எல்லா மருத்துவர்களும் சொல்வது போல்,எங்களால் முடிந்த அளவுக்கு வைத்தியம் செய்துவிட்டோம்; எல்லாச் சக்திக்கும் மேலான இறைவன் நினைத்தால் மட்டுமே சுகம் கிடைக்கும் என்று சொல்லி விட்டனர். அப்படியானால் ஏதாவது ஓர் அற்புதம் நடக்க வேண்டும்!

எசேக்கியா நல்ல ராஜா என்று தேவனுக்கும் தெரியும். ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக ராஜாவுக்கு தேவன் சொல்லி அனுப்பிய செய்தி: ‘‘உன் வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்து; ஏனெனில் நீ பிழைக்கமாட்டாய்.’’ ஏசா 38:1.

படுக்கை அறையில் எசேக்கியா ராஜா மிகவும் சோர்வுடனும், கவலையுடனும் படுத்திருந்தார். அவருடைய நோய் அவருக்கு மிகவும் வேதனையைத் தந்தது. அவர் மிகவும் நல்ல ராஜாவாக, தேவனுக்குப் பயந்தவராக வாழ்ந்தவர். வேதத்தின்படியும் தீர்க்கதரிசிகளின் சொற்படியும் மிகவும் கீழ்ப்படிந்து வாழ்ந்தவர். மேலும் தேவன்மேல் அளவற்ற நம்பிக்கை உள்ளவராகவும் வாழ்ந்தவர். தான் இறக்கப் போகும் செய்தியை தேவனிடமிருந்து தீர்க்கதரிசி ஏசாயா மூலம் அறிந்தபோது, அவர் மிகவும் கவலைப்பட்டார்.

எனவே, சுவற்றுப் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு,‘‘ஆ! கர்த்தாவே, நான் உமக்கு முன் உண்மையும் மனஉத்தமுமாய் நடந்து,



மனன வசனம்

தாம் சொன்ன இந்த வார்த்தையின்படி
கர்த்தர் செய்வார்.
ஏசாயா 38:8.

உமது பார்வைக்கு நலமான தைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்'' என்று ஜெபித்தவாறே மிகவும் தேம்பித்தேம்பி அழுதார்.

அவரது அழுகையையும் உருக்கமான ஜெபத்தையும், அங்கிருந்த அவரது ஊழியர் களும் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால், அவர் களால் எதுவும் செய்ய முடிய வில்லை. இனி என்ன நடக்கப் போகிறதோ என அனைவரது உள்ளமும் வேதனையாலும் பயத்தாலும் நிறைந்திருந்தது.

தேவன் அந்த எசேக்கியா ராஜாவின்மேல்இரக்கம் கொண் டார். ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் மீண்டும் ஒரு செய்தியை



தேவன், ராஜாவுக்கு அனுப்பி னார். ''உன் ஜெபத்தைக் கேட் டேன்; உன் கண்ணீரைக் கண் டேன்; உன் வாழ்நாளில் மேலும் 15 ஆண்டுகளை உனக்குக் கூட் டித்தருகிறேன்; இதோ, ஆகாசு டைய சூரியக்கடிகாரத்தில் பாகைக்குப் பாகை இறங்கின சாயையைப் பத்துப்பாகை பின் னிட்டுத் திருப்புவேன்: இதுவே கர்த்தர் உனக்குக் கொடுக்கும் அடையாளம்.''

ராஜாவை நன்கு கவனிக்கு மாறு ஏசாயா தீர்க்கதரிசி ராஜா வின் ஊழியக்காரர்களிடத்தில் சொன்னார்; ஊழியக்காரர் களும் அவ்வாறே நன்கு கவனித்துக் கொண்டார்கள். மேலும் 15 வருடங்கள் எசேக் கியா ராஜா தொடர்ந்து தேவ னுக்குச் சேவைசெய்தார்.

எசேக்கியா ராஜா இந்த அற்புதத்தை எழுதிவைத்தார். தன்னுடைய குடும்பத்தினருக் கும் இன்னும் பிறருக்கும் தேவன் தனக்காகச் செய்த அற்புதத்தைச் சொல்ல வாய்ப்புக் கிடைத்ததற்காக மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

''கர்த்தர் என்னை இரட்சிக்க வந்தார்; ஆகையால் எங்கள்

செய்தி

தேவன் தம் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார்.

ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோம் என்று எழுதிவைத்தான்.'' ஏசாயா 38:20.

உலகில் வியாதியால் துன்பப்படுகிற, இறக்கிற மக்கள் ஏராளம் உண்டு. ஆனால், எசேக்கியா ராஜாவிற்கு நிகழ்வித்த அற்புதத்தை தேவன் எல்லாருக்கும் செய்துவிடுவதும் இல்லை. இருப்பினும் நம் யாவருக்கும் ஒரு நம்பிக்கை உண்டு. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது, தேவனுக்குப் பிரியமாக உலகில் வாழ்ந்து இறந்தவர்களை தேவன் உயிரோடே எழுப்புவது நிச்சயம்!

செல்லமே, வியாதி, மரணம், துன்பம் எதுவுமே இல்லாத உலகம் வேண்டுமா?

செய்முறை: சிலநேரங்களில் எசேக்கியா ராஜாபோல நாமும் நம்பிக்கையற்று இருக்கிறோம். தேவன் மிகப்பெரிய ஓர் அற்புதம் செய்து அந்த ராஜாவுக்கு 15 வருடங்களைக் கூட்டிக்கொடுத்தார். கடிகாரம் பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பியதால் நிச்சயமாக அந்த அற்புதம் நிகழுமென ராஜா நம்பினார். கீழுள்ள கடிகாரங்களில் ஒன்றுபோல மணிகாட்டும் கடிகாரங்களைக் குறியுங்கள்.

புதிர் 6

